1374 சனவரி 29]

திரு. த. சோணையா : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகளை மற்ற மாநிலத்தவர்கள் அமைச்சர்கள் இம்மாதிரி திட்டத்தை அங்கேயும் செயல்படுத்துவதற்கு என்று வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்களா ? அப்படியானால் எந்தெந்த மாநிலத்தவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள்? மற்ற மாநிலத்தவர் மத்திய சர்க்காரால் தூது அனுப்பி இங்கே வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தத் திட்டங்களையெல்லாம் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திர மாநில அமைச்சர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை தங்கள் மாநிலங்களில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Labour, the rate of interest that is charged for the loans from the Central Government and the time given for repayment ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மத்திய அரசிடமிருந்து கடன் எதும் நமது மாநிலம் பெறவில்லை. எனவே திருப்பித் தரவேண்டிய பிரச்சினையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். சுப்பையா : ரூ. 2½ கோடி தொகை கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இதில் என்னென்ன திட்டங்கள், வேலைகள் அடங்கியிருக்கின்றன என்பதை கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த ரூ. 2½ கோடியில் செய்ய வேண்டிய காரியங்கள், குடிசை சுற்றுப் புறங்களில் துப்புரவு வேலை, விளக்கு போடுவது, முடிந்தால் ரோடு போடுவது ஆகியவைகளாகும். நமது நாட்டிலுள்ள பிரச்சினை, குடிசை பகுதிகளில் பாதை அமைப்பது என்பது முடியாது—இது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே, இந்த ரூ. 2½ கோடியை நேரடியாக பயன்படுத்த முடியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் அடிப்படையில் சில மாதங்களுக்கு முன்பு திரு கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான Santhome சாலையிலுள்ள நிலத்திலே கட்டப்பட்டிருந்த குடிசைகளை அப்புறப்படுத்தி, அங்கே வாழ்ந்து கொண்டிருந்த குடிசை வாழ்மக்களை கடற்கரையோரத்தில் அவர்களுக்கு இடம் கொடுத்து குடியமர்த்தியிருக்கிறார்கள். அந்த இடத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை. குறிப்பாக விளக்கு இல்லை. கக்கூஸ்

இல்லை, குடி தண்ணீர் வசதி இல்லை, பாதை இல்லை, என்ற நிலை இருக்கிறது. அவர்களை அப்புறப்படுத்திய பிறகும் அவர்கள் முன்பு இருந்த இடத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அந்த விளக்குகளை மாற்றி அவர்கள் இப்போது இருக்கும் இடத்திற்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அம்மையார் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்ற குறைபாடுகள் இருந்தால் உடனடியாக அவற்றைக் களைவதற்கு குடிசை மாற்று வாரியம் ஏற்பாடு செய்யும்.

மாயூரத்தில் அரசுப் பேருந்து பணிமனை.

*239 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரில் அரசுப் பேருந்துகளுக்கான தனி டெப்போ ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

மதுரையில் அரசுப் பேருந்து நிலையம்.

*240 வினா—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரின் வட பகுதியில் ஒரு புதிய அரசுப் பேருந்து நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 216, 217 218, 219 நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]